DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | ரகுவர்மன் | Age | : | 28 |
| F/N | : | திராவிட செல்வன் | Occupation | : | IT Company ல் பணிபுரிகிறேன் |
| Village | : | வெளிப்பட்டிணம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of November 2023.

**27.11.2023**

**(எதிரிகள் ஆஜராகவில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வெளிப்பட்டிணத்தில் குடியிருந்து கொண்டு சென்னை IT Company ல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். நிலம் சம்மந்தமாக எதிரிகளுக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. அந்த நிலையில் கடந்த 24.05.2018ம் தேதி காலை 07.00 மணியளவில் எங்கள் இடத்தில் இருந்த செப்டி டேங்க்கை மூடுவதற்காக அ.சா.1 ஆன எனது அப்பா சென்றிருந்தார். எதிரிகள் குழவிக்கல்லை வைத்து எனது அப்பாவின் தலையில் அடித்துவிட்டார்கள். எனது மச்சான் மகேஸ் எனக்கு போன் செய்து எனது அப்பாவை எதிரிகள் தாக்கியதால் அவரை மருத்துவமனையில் அனுமதித்து வைத்திருப்பதாக சொன்னார். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது அப்பாவின் தலையிலும், நெஞ்சிலும் காயங்கள் இருந்தன. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து எனது அப்பா புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது நான் போட்டேன். (**அந்த அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போன் மூலம் சம்பவத்தை பற்றி எனக்கு தகவல் வந்தது என்றாலும் சரிதான். எனக்கு மகேஸ் என்பவர் சம்பவ தினத்தன்று காலை 07.15 மணிக்கு தகவல் சொன்னார். நான் மருத்துவமனைக்கு காலை 11.00 மணிக்கு சென்றேன். நான் சென்னையில்

இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு கல்லூரி படிப்பை முடித்துவிட்டு மதுரையில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் படித்து கொண்டிருந்தேன். எனது அப்பா மீது வழக்கு ஒன்று கோகுல கண்ணன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சம்பவத்தை பற்றி எனக்கு தகவல் வரவில்லை என்றாலும், சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்கு சாட்சி வேண்டும் என்பதற்காக பின்னிட்டு என்னை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No.120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | அறிவுநிதி | Age | : | 33 |
| F/N | : | திராவிட செல்வன் | Occupation | : | ஓட்டுநர் |
| Village | : | வசந்த நகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of November 2023.

**27.11.2023**

**(எதிரிகள் ஆஜராகவில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் வசந்த நகரில் குடியிருந்து கொண்டு ஆக்டிங் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 25.05.2018ம் தேதி இரவு 07.30 மணியைப்போல கம்பர் தெருவில் உள்ள மாரி என்பவரின் வீட்டின் முன்பாக பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

எங்கள் வீட்டு அருகே இரண்டு பக்கமும் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிடும் போது அங்கு பொதுமக்கள் இருந்தார்கள் என்றாலும், அவர்களும் பார்த்து கொண்டிருந்தார்கள் என்றாலும் சரிதான். அ.சா.1 எனது தந்தை என்றால் சரிதான். பார்வை மகஜரை யார் எழுதியது என்றால் சார்பு ஆய்வாளர் மேடம் எழுதினார். நான் கையெழுத்து செய்யும்போது தேதியிட்டு கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் நான் ஒரே ஒரு கையெழுத்து செய்தேன். இவ்வழக்கின் சம்பவம் நடந்த அதே நாளில் வேறு ஒரு சம்பவம் நடைபெற்றதிற்காக எனது அப்பா மீது வேறு ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்திற்கு போலீசார் வரவில்லை என்றாலும், ஏற்கனவே அப்பா மீது குற்ற எண். 125/2018ல் வழக்கு ஒன்று கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்பதாலும், அதை சரி கட்டுவதற்காகவும் காவல்துறை கேட்டு கொண்டதாலும் காவல் நிலையத்தில்

வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.120/2018**

| Deposition of the | : | PW6 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துக்குமார் | Age | : | 33 |
| F/N | : | சுப்பிரமணியன் | Occupation | : | தனியார் நிறுவன வேலை |
| Village | : | கம்பர் தெரு | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of November 2023.

**27.11.2023**

**(எதிரிகள் ஆஜராகவில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கம்பர் தெருவில் குடியிருந்து கொண்டு ஏசியன் கிளாஸ் ஹவுஸில் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 25.05.2018ம் தேதி இரவு 07.30 மணியைப்போல கம்பர் தெருவில் உள்ள கோகுல கண்ணன், முருகானந்தம் ஆகியோரின் வீட்டருகே உள்ள எங்கள் வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது சார்பு ஆய்வாளர் அந்த இடத்திற்கு வந்து இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், அ.சா.5 ம் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

அ.சா.5 எனது நண்பர் ஆவார். கோகுல கண்ணன் என்பவரின் வீட்டு வாசல் முன்பு நின்று தான் சார்பு ஆய்வாளர் படம் வரைந்தார்கள் என்றால் சரிதான். கோகுல கண்ணன் என்பவரின் வீடு எங்கள் வீட்டில் இருந்து கிழக்கு திசையில் சுமார் 50 அடி தூரத்தில் உள்ளது. கோகுல கண்ணன் என்பவரின் வீட்டை சுற்றி யார் யார் வீடு உள்ளது என்றால் வி.வி.ஜி.எம் அவர்களின் வீடு உள்ளது. கோவில் ஒன்று உள்ளது. மற்ற வீட்டு உரிமையாளர்களின் பெயர் எனக்கு தெரியாது. சார்பு ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நான் அந்த இடத்திற்கு சென்றேன். என்னை அழைக்கும்போது அங்கிருந்த நிறைய நபர்கள் அதை பார்த்தார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரை பெண் சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்திற்கு சொன்ன நேரத்தில் சார்பு ஆய்வாளர் வரவில்லை என்றாலும், ஏற்கனவே அ.சா.5ன் அப்பா மீது குற்ற

எண். 125/2018 ல் வழக்கு ஒன்று கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்பதாலும், அதை சரி கட்டுவதற்காகவும் காவல்துறை கேட்டு கொண்டதாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**